DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : C**C 4/2024** |
| Deposition of Witness for | : PW 5 |
| Name | : பொன்னுச்சாமி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 19.05.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 19th **May** 2026.

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**<u>முதல்விசாரணை:</u>**

நான் காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது பணிஓய்வு பெற்றுவிட்டேன். இதற்கு முன்பு பனவடலிசத்திரம் காவல்நிலையத்தில் நான் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியிலிருந்த போது 23.04.2013 ம் தேதி இரவு சுமார் 8.00 மணியளவில் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் சென்று அங்கு சிகிச்சையிலிருந்த மகேந்திரனின் மனைவி சேர்மக்கனி என்பவரிடமிருந்து புகார்வாக்குமூலம் பெற்றேன். பின்பு 23.00 மணிக்கு காவல்நிலையம் திரும்பு அந்த புகார்வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப காவல்நிலைய குற்ற எண்.50/2013 ச/பி. 294(பி), 324, 427, 506(2) இதச – ன் கீழ்முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அந்த புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கையின் அசலை சங்கரன்கோவில் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

அவற்றின் நகல்களை சம்பந்தப்பட்ட உயர்அதிகாரிகளுக்கு அனுப்பியும், அவற்றின் ஒரு நகலை ஆய்வாளர் ஆதிலிங்கம் போஸ் என்பவரின் பார்வைக்கும் வைத்தேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னைவிசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் புகார் வாக்குமூலம் பெற சென்ற போது காயம்பட்ட நபர் எங்கிருந்தார் என்றால் மருத்துவமனையிலிருந்தார். சங்கரன்கோவில் அரசு மருத்வதமனையிலிருந்து சம்பவம் தொடர்பாக காவல்நிலையத்திற்கு தகவலானது இரவு 8.00 மணியளவில் கிடைக்கப்பெற்றது என்று முதல்விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் புகார் வாக்குமூலம் பெற சென்றபோது மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த நபரின் பெயர் 1 ½ வயது மதிக்கத்தக்க ஜெகதீஸ் என்ற குழந்தை சிகிச்சையிலிருந்தது. மேற்கண்ட குழந்தை சிகிச்சையிலிருந்தது பற்றி எனது முதல் விசாரணையில் நான் கூறவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறிய நாள் மற்றும் நேரத்தில் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையிலிருந்து எனக்கு தகவல் கிடைக்கப்பறெவில்லை என்றாலும், அந்த தகவலை பெற்று நான் மருத்துவமனைக்கு சென்று புகார் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றாலும், நான் எழுதாத வெள்ளை பேப்பரில் சேர்மக்கனி என்ற நபரிடமிருந்து கையொப்பம் பெற்று புகார் வாக்குமூலத்தை உற்பத்திசெய்து அதனடிப்படையில் பொய்யாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றாலும், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**